உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநம:.

சித்தாந்தரத்நாகரம்.

தணிகாசலஸ்தவம்.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

ஞூ ஸ்ரீ,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS.

PRINTED AT THE MEMORIAL PRESS,

No. 39, THUMBOO CHETTY STREET,

30th May 1881.

Registered Copy-Right.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசுந்தராக்யகுருவர்யாயநம:.

சித்தாந்தரத்நாகரம்.

* தணிகாசலஸ்தவம்.

எவனுயர் மறைமுடி மிசைநட மிசைதரும்
எவனுயிர் தொறுமட வரலொடு மிவர்தரும்
எவனமரர்க ளதிபதி யென விலகுறும்
அவனருள் பெறும்வகை யடைதி நன்மனனே.

நூல்.

(உலகமாயையிலுதிக்குமென்றது.)

பொற்பிதிரனைய துலகமாயையிடைப்
புகன்றிடிலெனுமுயர்சைவ
சிற்பரஞானமுணர்தியென்றனனெஞ்
செல்வமாய்க்காழியில்வந்த
கற்பகமாயென்கண்மணியாகிக்
கருத்தினிற்கலந்துதித்திக்கு
மற்புதனெங்கள்வாழ்வெனுந்தணிகை
யங்கிரிமேயவங்கணனே. (க)

* இது மூலம் (க00) பாடல் முடிந்தவுடன் இதற்கு வியாக்கியானம் பிரமாணசகிதமாய் வெளியிடப்படும்.

(உலகம்பிரமத்துதியாதென்றது.)

உலகநற்பிரமத்திடையுதித்திடுமென்
றுரைத்திடுமூடர்வாய்மூடக்
குலவுமிப்பவஞ்சமசத்துயர்பிரம
சத்தினிற்கூறொணாதென்றான்
மலைமகடுணைவன்முக்கணனீல
மணிமிடற்றவனெனவேதம்
நிலவிநின்றேத்துமொருபரன்மகனென்
னெஞ்சிவர்தணிகைநின்மலனே. (௨)

(அசத்திலசத்தேயாகுமென்றது.)

சிலம்பிவாயிடைநூலென்னவேசத்தி
லசத்துவந்திடுமுறைசெப்பிப்
புலம்புவார்சிலம்பியுடலசத்ததினு
லசத்துவந்திடுமெனப்புகன்றான்
சிலம்பெனக்கலிக்குமெசுர்மறைவேத
சிரசெனும்பிரமவல்லியினன்
னலம்பெறற்கெழுதியென்றருடணிகை
நாயகன்வள்ளிநாயகனே. (௩)

(எசுர்மறைசிவனுக்கேயுரித்தென்றது.)

இசைதருகாயத்திரியிதயத்தி
லேர்ச்சிவபார்வதியுருவத்
தேசுர்மறைவயத்தினிடபவாகனியா
யேத்துகாயத்திரிதெய்வ
நசைதவிர்மூன்றுசந்தியிலிடையே
நாட்டுசந்தியிலியங்கிடுமென்
றசைவுறுதருளிச்செய்தனன்றணிகை
யம்பதிமேயவந்தணனே. (௪)

(இதுவுமது.)

காலையிலிருக்கும்பிரமனுமாலைக்
காலமந்தணர்கொளுஞ்சாம
மாலுமென்றினிதுவிளங்கவினுண்மை
வந்தகாயத்திரிமுறையே

சாலுமெந்தாதைபெசுர்மறைபோற்றுஞ்
சதுரனென்றெங்கலிதீரப்
பாலொடுபழத்தினிரதமுங்கைக்கப்
பகர்ந்தனன்றணிகையம்பரனே. (ரு)

(எசுர்வேதத்துக்கேற்றமுரைத்தது.)

ஐந்தெழுத்தழிவில்சிவவெனுமிரண்டா
லலருமவ்வைந்திலுயர்கொண்
முந்துசிருத்ரநமகமுமதனுன்
முதலெழுகாண்டத்திநடுவே
யுந்துநாலாவதொப்பில்காண்டமுமற்
றுளவதனுலெசுர்வேதம்
வந்தொளிர்தருமென்றிசைத்தனன்றணிகை
வாழ்வெனவந்தகண்மணியே. (சா)

(வேதமடங்கலும்விளம்பலீதென்றது.)

எசுவொனும்வேதத்தாலுளவெல்லா
வேதமும்வயங்குமிங்கதனு
லிசையுமெய்ப்பெருமையன்றிமாமறைக
ளேத்துறுதென்றெனக்கிசைத்தான்
அசரமுஞ்சரமுமாகியல்லவுமா
மருட்பரன்றன்னில்வேருகாக்
கசமுகற்கிளையசேயெனுந்தணிகைக்
கந்தவேளென்னுயிர்த்துணையே. (எ)

(குகனேகாழியர்கோனெனவுரைத்தது.)

தணிகையில்வாழுந்தமனியக்குன்றே
சங்கரனுர்மகிழ்ந்திடுகண்
மணியெனவந்தமதலையேயென்று
வாழ்த்துமென்முகநனிநோக்கி
யணிகொளம்பலக்கூத்தெந்தையேவுதலா
லன்றுகாழிப்பதிமேவித்
திணிகொள்சித்தாந்தமருளினமுலகி
லென்றனன்றணிகைமாதேவே. (அ)

(சத்துமசத்துந்தாமிவையென்றது.)

சத்துநாமெம்மைச்சார்தராவசத்து
மசத்தையுஞ்சார்கிலம்யாமப்
பெத்தமாமசத்தேபாசமிவ்வுண்மை
பேசுவோர்பெரியயொன்றிசைத்தான்
வத்துநாமென்றுவாய்மதம்பேசும்
வம்பர்மாட்டிணங்கிலாவெம்மைச்
சுத்தமார்க்கத்தில்விடுக்குநற்றணிகைச்
சுந்தரானந்தசண்முகனே. (௯)

(சதசத்திதுவெனச்சாற்றப்போந்தது.)

சத்தசத்திரண்டின்றன்மைசார்தலினாற்
சதசத்தாமென்றெனவேத
மெய்த்தவாகமத்தின்விதிவழாதுணர்த்து
வேற்றுமைசழக்கெனமொழிந்தான்
பத்தியிற்சிறந்துமேம்படுயோகப்
பண்பினர்க்கழிவறுமின்ப
முத்தியைநல்குந்தணிகையம்பதியின்
முளைத்தருளாறுமாமுகனே. (௧௦)

(கடவுணிமித்தகாரணரென்றது.)

காரியமொன்றுதோர்ந்திடினதற்குக்
காரணமூன்றுளவவற்றுட்
சீரியநிமித்தமெனைத்ததுநீர்மை
சேருமெம்பாலெனமொழிந்தான்
நேரியமுதனற்றுணையெனும்வேறு
நீடுகாரணமுணர்வார்தங்
கூரியமதியிற்குடிகொளுந்தணிகைக்
கோவெனுங்குறமகள்பதியே. (௧௧)

(ஆகமம்வேதத்ததிகமென்றது.)

கருமநற்பிரமபாகமோரிரண்டுங்
கரிசறவோதுநான்மறையில்
வருமுதற்பாகம்பூருவமாகி
மற்றதுமாட்சிபெற்றதுபோ

லருமறைநான்கும்பூருவமாகி
யருட்சிவாகமந்தழைத்திடுமென்
றெருமையினெளிவந்துரைத்தனனெளியேற்
கொப்பிலாத்தணிகையுத்தமனே. (கஉ)

(இதுவுமது.)

மறைநவில்கருமஞானமோரிரண்டின்
மறையவர்க்கேகருமத்தி
னிறையதிகாரமாகிமெய்ஞ்ஞான
நீசரும்பெறற்குரிமையினு
லறையுமெய்ஞ்ஞானந்தாழுமோகருமத்
தளவிலப்படியுணரொன்றுன்
முறைகொள்வேதாகமங்களைத்தணிகை
முழுமுதலாகுமுன்னவனே. (கங)

(சுயம்பெனமறையைச்சொல்வதன்றென்பது.)

மறைசுயம்பென்பவம்மறைமேலா
மானமென்பெறுமெனிலந்தோ
நிறைமதியின்றிக்குழறுபவேத
நீடொலிமயமெனிலதனை
யறைகுவர்சட்மாயாதலினதுதா
னருளுமோநனிவிவத்தையிலென்
றறைவனெந்தணிகைத்தேசிகனதுமற்
றென்னுரையெனவிசைத்தனனே. (கச)

(தமிழ்வேதத்தின்றன்மையுரைத்தது.)

எம்மில்வேறாகாவெந்தையார்புகழிங்
கெய்துமாகாழியில்வந்தன்
றெம்மையுமுயிர்கள்பிழைக்கநன்கோது
மெந்திருவாக்குமெந்துணைவர்
செம்மையர்மூவர்தந்திருவாக்குந்
தேர்ந்தபேர்க்கேசிவமுண்டாம்
அம்மநீயுணர்தியென்றனன்றணிகை
யசலமீதுறையுமாரியனே. (கரு)

(நால்வர்வாக்கினலமிதுவென்றது.)

விடர்க்கிளம்பாவையார்மொழியினிக்கு
மேன்மையிற்களிக்குமெந்தாதை
யிடர்க்கடலழுந்துமுயிர்க்கருடரவீண்
டெழுந்தருணுல்வர்தம்வாக்கிற்
சுடர்க்கொழுந்தனையவன்னதிஞ்சொல்லிற்
சுகமளப்பரியதென்றிசைத்தான்
அடர்த்தமெய்யாகமத்துடன்வேத
மன்றருட்ணிகையற்புதனே. (கசு)

(உபயவேதத்துண்மையுரைத்தது.)

மறையடைத்திட்டகதவமம்மறையே
மாற்றுதலின்றிவாகீசர்
நிறைமொழிமாற்றக்கண்டனமீண்டு
நீட்ருட்காழிமாமுனிவன்
அறைதிருவாக்காலடைந்ததாகலினவ்
வருமறைப்பேதமாமவர்வாக்
கிறைமைசால்பெரியோரறிவரிவ்வுண்மை
யென்றனன்றணிகையெங்கோவே. (கஎ)

(சைவநிந்தையர்சார்பொழியென்றது.)

எம்மையுமன்பர்தம்மையுநிந்தை
யிசைக்குனர்தம்மையென்றென்று
மம்மநீகாணிற்பேசிடினினைக்கி
லாம்பிழையறிதியென்றிசைத்தான்
கொம்மைமென்முலையார்கூட்டமேபற்றிக்
கொடுங்தொழிற்புலையனுய்த்திரியு
மெம்மையும்பணிகொண்டருடரவல்ல
வீசனுந்தணிகையெண்குணனே. (கஅ)

(ஈசன்பூசனைக்கிடமிவையென்றது.)

எங்குநாம்விரவியிருப்பினுமன்ப
ரிடத்தினுமிலிங்கமாமிடத்துந்
தங்கியேபூசையேற்றுயிர்க்கருளுந்
தன்மையானிடமதுதருபா

லங்கமுற்றிடினுமடைவதுமுலையி
லாவதுபோன்மெனமொழிந்தான்
சங்கரன்மகனம்பிகைதருசேயென்
சாமியாந்தணிகைநாவலனே. (கசு)

(இமையவர்சாதியிதுவிதுவென்றது.)

சிவன்மறையோனிந்திரைமகிழ்கேள்வன்
சிறப்புடையரையன்வைசியனே
தவமுடைப்பிரமன்சூத்திரனுகுஞ்
சசியிடந்தோயுமிந்திரனே
பவமிகையார்க்கிப்பண்புகூறினுமென்
பயனுளந்தேர்தியென்றிசைத்தான்
சவமுகத்தினர்காண்பரியநற்றணிகைச்
சண்முகஞானதேசிகனே. (உ0)

(சிவமாமறையோர்சிறப்புரைசெய்தது.)

தேவரிற்பிரமன்வசியனுகையிலத்
திசைமுகன்முகத்தில்வந்துதித்தோ
ராவரோபிரமகுலத்தவராக
வன்றருட்சிவபிரான்முகத்தி
லேவர்வந்துதித்தோரவர்பிராமணரொன்
றியம்புதறகுமெனவிசைத்தான்
சேவலங்கொடியெந்தணிகைநாயகனெஞ்
செல்வமாங்கவுணியர்மணியே. (உக)

(இதுவுமது.)

சிவமறையோர்தந்திடப்பெறலன்றித்
தீண்டிடில்யாவராயினுமிங்
கெவமினின்மாலியம்பலயோனி
யெய்திமாழ்குவர்நிரயத்தி
லவநிறைமாந்தரறிவரோவறியா
ரையநீயறிதியென்றிசைத்தான்
தவமலியன்பர்போற்றுமெய்ஞ்ஞானச்
சதுரனெந்தணிகைவேதியனே. (உஉ)

(சச்சிதானந்தத்தன்மையுரைத்தது.)

* சச்சிதாநந்தமென்பதுதேரிற்
சதுரனெந்தாதையேசத்தாம்
இச்சைகூர்சித்தெந்தாயிடைதோன்று
மின்பவானந்தமென்வடிவாம்
விச்சைவேதியரெம்பிரிவுரையாரிம்
மெய்ம்மைநீயுணர்தியென்றிசைத்தான்
அச்சமாரநுர்தாதிகளொழித்தடியேற்
கருள்செயுந்தணிகையாண்டவனே. (உ௩)

(மூவிதஞானமுறைமைவகுத்தது.)

ஞானமோர்மூன்றினவில்பதிஞான
நாடினர்க்கேயெமதுண்மை
யானமெய்வாழ்வுண்டாம்பசுபாசத்
தடைவுடையார்மலபோதத்
தீனமெய்துவரிவ்வுண்மைநன்குணர்தி
யென்றனன்றணிகையில்வாழு
மோனதேசிகனென்னுளத்தவிசகலா
மூர்த்திநந்தாமுழுமுதலே. (உ௪)

(மூவகையுயிர்க்கருண்முறைமையுரைத்தது.)

ஒருமலமுடைவிஞ்ஞானகலர்க்கு
மொப்பிலாப்பிரளயாகலர்க்கும்
வருமலமூன்றில்வளர்சகலர்க்கும்
வழங்குதுமவரவர்போன்றெம்
அருள்விளையாட்டித்திறமெனவறிதற்
பாலதோவன்றெனமொழிந்தான்
குருவெனக்காழிப்பதியில்வந்தருளெங்
கொற்றவன்றணிகைவாழ்குகனே. (உ௫)

---

* சத்து, சித்து, ஆநந்தம்=சச்சிதாநந்தம்.

உள்ளது சத்து. அதன்குணம் சித்து. இடையிற்போந்த நிகழ்ச்சி ஆநந்தம். இவ்வுண்மை, சோமாஸ்கந்தமென்னும் சிவமூர்த்தத்திற் கண்டுணர்க.

(நவந்தருபேதநாடியுரைத்தது.)

உருவநாலருவநாலுருவருவ
　மொன்றுமாயல்லவாய்நாளும்
பரவுநால்வேதப்பண்புதேர்ந்தெந்தை
　பக்கல்சார்ந்தன்புசான்றவர்மெய்
விரவுபேரின்பவீட்டின்மேவுவரான்
　மெய்ம்மையீதென்றெனக்கிசைத்தான்
அரவுநீள்வேணியண்ணலார்மகனெம்
　மாருயிர்த்தணிகையாதவனே. (உசு)

(தீட்சாவிசிட்டந்தெரியவுரைத்தது.)

சைவமோராறுவிதமெனும்வேத
　சாத்திரப்படிநவிறீக்கை
செய்வரால்சாதிமுறைதெரிந்துண்மை
　சேருமெய்த்தவரொனச்செப்பி
யுய்வரோதீக்கைபெற்றிலாரன்னோர்க்
　குறுபணிபூண்டெனவுரைத்தே
தெய்வநல்லருடந்தாண்டனன்றணிகைத்
　தேசிகன்செங்கைவேலவனே. (உஎ)

(இதுவுமது.)

தீக்கையாலன்றிமுத்திகைகூடுந்
　தெண்கடனீந்துவார்தோணி
மீக்கொளாதேகினென்றருணேக்கென்
　மேல்விளைத்திம்மையோடம்மை
யாக்கமுள்ளங்கைநெல்லியங்கனியென்
　றருள்புரிந்தாண்டனனெங்கள்
பாக்கியமாகுந்தணிகையம்பதியிற்
　பரசுவர்க்கருள்பரஞ்சுடரோ (உஅ)

(இதுவுமது.)

எண்ணிலாப்பேதமெய்துமத்தீக்கை
யேய்ந்திடுமௌத்திரியிரண்டா
யெண்ணுசீர்க்கிரியைஞானமாமவற்று
ளேற்றதொன்றுலுயிர்ப்பாச
நண்ணுறுமலமாற்றியெம்பாத
நணுகுவித்தருள்வமென்றிசைத்தான்
கண்ணினுண்மணியாங்கவுணியர்போற்றுங்
கடவுளெந்தணிகைமாகடலே. (உ௯)

(அர்ச்சாராதனமதிகமென்றது.)

அர்ச்சையிலெம்மையன்பினுல்வழிபட்
டார்க்கெமதருள்வருமெம்ம
திச்சையாமன்னோர்க் கிகபரமிரண்டு
மீதலெம்வழிவராமூர்க்கர்
பிச்சரந்தோவெம்பவநனிமேவிப்
பீடழிந்தழிவரென்றுரைத்தான்
நச்சரவணியுநம்பனூர்மகனெந்
நாயகன்றணிகைநாவலனே. (௩0)

(இதுவுமது.)

அர்ச்சையைப்பழிப்பரறிவிலாரந்தோ
வருட்பரன்றன்னில்வேறுகா
விச்சைகூரதனேயியம்பிடிலெழுத்துக்
கிசைந்திடும்வரிவடிவாகு
மெச்சுமவ்வடிவமன்றியோரெழுத்து
மேவுறாதுள்ளமேலாக
வைச்சவம்முறையேகாண்டியென்றனனெம்
வாழ்வெனுந்தணிகைவானவனே. (௩௧)

(கண்டிவெண்ணீறிலார் முண்டைகளென்றது.)

கண்டிவெண்பூதிவேண்டிலாக்கயவர்
கழுமலந்தோன்றுமெம்பாத
தொண்டர்தங்குழுவிற்சேர்ந்திடாரன்னோர்
சொற்றிடுங்கணவனாயிழந்த
முண்டைகளாவர் குங்குமமஞ்சண்
முகத்தழிந்தவர்களேய்ந்துண்மை
கண்டவர்நாளும்விடுவரோவென்றான்
காவலன்றணிகையங்கணனே. (௩௨)

(மூவரின்மேலாமுதல்வனையுரைத்தது.)

பிரமனிந்திரன்மாலுருத்திரனிவர்கள்
பிறத்தலாற்காரணரன்றென்
றுரம்பெறவுரையாசம்புவாஞ்சிவனே
யொப்பில்காரணமெனவிதந்து
பரமெனல்காட்டிப்பண்புகூர்தியானப்
படிவமீதுணர்தியென்றருளாற்
சிரந்தருமேலாமதருவசிகையைச்
செப்பினன்றணிகைவாழ்சேயே. (௩௩)

(உயிர்தொறுஞ்சிவனுறையுண்மையுரைத்தது.)

ஒளியிருளிரண்டுமோரிடஞ்சேர்த
லொவ்வுறுதுயிர்தொறும்யாமங்
களிமிகவிரவிநின்றமைவினவி
லனல்பசுமரம்விரவியசீ
ரொளிமையின்விளங்குமாறெவன்பாக
மெய்துமாலுயிர்மரம்போலித்
தெளிவுடையார்க்கேமுத்தியென்றனனெந்
தேசிகன்றணிகைமாநிதியே. (௩௪)

(சத்திகளிரண்டின்றன்மையுரைத்தது.)

சத்திகளிரண்டாமெமக்கெனும்வேத
சாரமோர்கிலர்பரிக்கிரக
சத்தியொன்றுரைதாதான்மியமொன்று
சார்ந்திடுஞ்சாற்றிடின்முறையே
நித்தமாமாயையொன்றுமற்றென்று
நீடுசிற்சத்தியாமிரண்டு
மெத்திறமேகமாகுமென்றனனெம்
மிறைவனுந்தணிகையெண்குணனே. (௩௫)

(இதுவுமது.)

கையுமற்றதனிற்கோலுமாமன்ன
காரணசத்திகளிரண்டுங்
கையுமற்றதனிற்கோலுமொன்றாகக்
காட்டுமேலொன்றெனக்காட்டு
மையநீள்சடசித்தாமவையதனு
லாம்விசாதிகமெனப்பகர்ந்தான்
செய்யநீடொளிசெய்தணிகைமால்வரையிற்
சேருமம்பிகைதருஞ்சேயே. (௩௬)

(உளர்த்துவரோதசுமாபதியென்றது.)

சிவனெனுமெந்தையுயிர்கள்போலின்பந்
தேக்குறக்கீழ்முகத்திசையு
மெவமிலிந்தியம்பாய்தரச்செயுமதனு
லெம்பவம்வாய்த்திலதென்று
நவமிகுசீர்த்தியூர்த்துவரோத
செனநவின்றிடுமறையதனு
லவன்விழியாறிற்பிறந்தனமென்று
னறுமுகன்றணிகையந்தணனே. (௩௭)

(காயத்திரிப்பொருள் கண்ணுதலென்றது.)

மறைதவழ்காயத்திரிமநுநீடு
　　மாண்பொருளெந்தைசங்கரனு
மறிமினென்றன்னேன்றுணைவிழியம்மை
　　யருள்விளையாட்டின்மூடுகையி
னிறைதருமிருள்சித்தொளிசெயக்காட்டு
　　நெற்றியிற்காட்டுமம்பகமே
முறையிதுவாகுமென்றனன்றணிகை
　　முருகவேள்கவுணியர்முதலே. (௩௮)

(இதுவுமது.)

மாயனைக்கூறும்வஞ்சகர்பேடி
　　வாசகங்கேட்டலையன்மின்
பேயர்பல்லாறுபிழைபடப்பேசிப்
　　பிதற்றுவாரெந்தையேநாடுந்
தூயசீர்ப்பர்க்கநற்பதத்தொளியாந்
　　தொன்மைகண்டுணர்தியென்றிசைத்தான்
மேயநற்றணிகைமேவிவாழ்கந்த
　　வேண்மயிலூர்திவித்தகனே. (௩௯)

(தெய்வஞ்சிவனெனத் தெளியவுரைத்தது.)

தெய்வமொன்றதுவேசிவமெனமறைகள்
　　செப்பவுமுடன்றுபற்பலவாந்
தெய்வமாயத்தாற்சமயசங்கேதஞ்
　　செய்துழல்பதிதர்தாமென்னே
யுய்வரோமுனிவரிட்டசாபத்தா
　　லுழல்பவர்காண்டியென்றுரைத்தான்
செய்வளமிகுசீர்த்தணிகையம்பதியிற்
　　சிவமணியெனவளர்தேவே. (௪0)

(இமையவர்செருக்கை யீசன்மாய்த்தது.)

எந்தையோரியக்கனுகியிந்திரன்மா
　　லெரிமுதலோர்வலிதபவன்
றந்தியோர்துரும்பையசைத்திடக்கேட்ட
　　துணர்திகொன்மறையிடத்தென்முன்

வந்தவணிவனென்பதியெனக்கூறு
மாதுமைதருமுலைப்பாலுண்
டந்தாமுனிவர்போற்றுநற்றணிகை
யமர்ந்தருள்பரமசற்குருவே. (சக)

(பரனிமையோரைப் பங்கஞ்செய்தது.)

பிரமனைச்சிரங்கொய்தவற்கிளையோனைப்
பேருடன்மாய்த்தெரிகரத்தை
யுரமிறத்தறித்துமாயனைச்சூலத்
துச்சிகோர்த்தந்தகன்வீழத்
தரமுறவுதைத்துத்தண்ணருள்கொழிக்குந்
தலைவனென்றுதையென்றிசைத்தான்
வரமுறுந்தணிகைவள்ளறெய்வானை
வள்ளிநாயகிமகிழ்வோனே. (சஉ)

(அரியொப்பாவதைப் படியரற்கென்றது.)

மாயனென்றொருவன்கருநிறம்பெற்று
மன்னியேபிறவிகள்பலவிங்
காயபேருண்டிநித்திரைவிழைவுற்
றப்பிறவிகண்மலதேக
மேயசூகரமீன்கமடமாயோனி
விரும்புமேலவன்பிறப்பில்லாத்
தூயசங்கரனுக்கொப்பெவனென்றுன்
றொன்மைசேர்தணிகைநாயகனே. (சரு)

(தேவர்பசுக்கள் சிவன்பதியென்றது.)

பிரமனார்தலையுங்காமனாருடலும்
பிஞ்ஞகனெந்தையாலழியுந்
தருமமேகண்டாய்பசுக்களென்றவரைச
சாற்றிடுமறையெனநவின்றுன்
சுரர்முனிவோராம்பசுக்களைப்பாசத்
தொடக்கினிலாட்டுவித்தருளும்
பரசிவனெங்கள்பசுபதிமகனெம்
பண்ணவன்றணிகைவிண்ணவனே. (சச)

(சங்கரன்மால்சுதர் தன்மையுரைத்தது.)

எந்தைசங்கரனுக்கிருவர்யாம்புதல்வ
ரெந்தைபோலமலமெய்துதலால்
விந்தையாயேனும்பிறந்திலம்யோனி
மேவிமாலவன்சுதரிருவர்
நொந்துபல்யோனிதொறுநுழைந்திழிவர்
நான்முகத்துணர்தியென்றிசைத்தான்
கந்தவேண்ஞானபந்தனெந்தணிகைக்
கடவுளென்கண்ணினுண்மணியே. (சரு)

(மால்சுதர்பூசை வகித்திலதென்றது.)

எந்தைபோற்புதல்வரிருவர்யாம்பூசை
யெவ்வுலகத்துமேற்றிடுதல்
தந்திடுங்காட்சிநூல்களுமுரைக்குஞ்
சம்புவைநோற்றுமால்பெற்றுன்
அந்தமான்மக்கள்கதியெனிலில்லை
யாலயம்பூசையென்றுரைத்தான்
சந்தமார்தணிகைத்திருமலைமேவுஞ்
சாமியாங்குமரசற்குருவே. (சசா)

(காரணன்சிவனெனக் காட்டப் போந்தது.)

தேவனும் பகவநாமனுமன்றித்
தேயனுமீசனுவானும்
மூவரைக்கடந்தமூர்த்தியுமுக்கண்
மூர்த்தியும்புருடனுவானும்
யாவுமாமட்டமூர்த்தியுமன்பர்
யாதனைதபுமுருத்திரனும்
சேவுகந்தேறுமெந்தையென்றுரைத்தான்
திருத்தணிகாசலபதியே. (சஎ)

(இதுவுமது.)

பர்க்கனும்வேதகமகமேற்றுனும்
பசுபதிப்பெயருடையானும்
நக்கனும்விச்சுவாதிகக்கோனு
நகுதலைமாலைவேய்ந்தானும்

கைக்கனலானுங்கறைமிடற்றானுங்
கங்கைதாங்கியசடையானும்
முக்கணெந்தாதையென்றுரைசெய்தான்
முன்னவன்றணிகைவாழ்முதலே. (சஅ)

(இதுவுமது.)

ஓமெனும்பதத்தினுள்ளொளியானு
மொருபிறப்பேனுமெய்தானும்
சாமவேதனுமெச்சன்றலையோடு
தக்கனைத்தலையரிந்தோனும்
பூமகன்காமன்கூற்றுவன்மாலோன்
புரிதொழிற்கின்னல்செய்தானு
மீமகின்றுடுமெந்தையென்றுரைத்தா
னெம்பிரான்றணிகையெங்கோவே. (சகூ)

(இதுவுமது.)

பிரமும்பிரமக்கிழத்தியுமென்னப்
பேசிடுமறைசிவனுமையைத்
தருமியுந்தருமமென்னவுஞ்சாற்றுந்
தக்கநான்மறை யவர்தம்மைப்
பரமுறுஞ்சத்தன்சத்தியுமாகப்
பரவுசீருபநிடம்போற்றுந்
தாமுடையவரொந்தந்தைதாயென்றான்
சண்முகன்றணிகையெந்தவமே. (ருo)

(வேங்கடமலையின் விளக்கமீதென்றது.)

மலையுருவேண்டிப்பெற்றமாயவனை
மகிழ்ந்துவேங்கடமெனும்பெயர்தந்
தெலையில்பேரின்பவீடுயிர்க்கருள
வெழுந்தருள்கின்றனமதன்மேல்
இலகிகர்மலைமற்றதற்கெமக்கென்று
மேற்றசால்புடைத்தெனப்பகர்ந்தான்
கலையுரிபோர்த்தகண்ணுதன்மகனெங்
காவலன்றணிகைகாவலனே. (ருக)

(இதுவுமது.)

திருமலையாகியெந்தையைநந்தி
தினஞ்சுமந்திடுவன்மற்றதுபோல்
திருமலையாகிமாலெமைச்சுமக்குஞ்
செல்வமெய்தியுஞ்சிவன்வடிவைத்
திருமலைப்பாங்கோர்தடத்தொருசாருட்
டெளிவுறநிறுவினனென்ருன்
திருமலையாகுந்தணிகைமால்வரையிற்
றிகழ்சிவஞானசுந்தரனே. (ருஉ)

(தேவியுஞ்சுதருமிலான்சிவனென்றது.)

உயிர்வினைத்தொடர்பாலொன்ருெடொன்ருென்றி
யொளிர்தருமனைவிகாந்தனுமா
யயர்வில்சீர்மகவையீன்றிடுமதுபோ
லாதியம்பகவனுமுமையுஞ்
செயிர்தவிர்யானுஞ்சேர்ந்தபேரன்ருந்
தெளியினேர்பொருளெனுமதனு
லுயர்தருமனைவிசுதரிலான்சிவனென்
றுரைத்தனன்றணிகையுத்தமனே. (ருங)

(குருபரனருளைக் குலவிமகிழ்ந்தது.)

காழிமாதவனுய்க்கவுணியர்மகிழுங்
கண்மணியாயவதரித்தே
யாழிமாஞாலத்தருமறைநெறிதந்
தருளியமுருகவேளெம்மான்
வாழியென்றென்னைவருகவென்றழைத்தே
வண்மலர்ப்பாதங்கள்சூட்டிக்
கீழிடாதாண்டான்றணிகைமால்வரையிற்
கேடிலாப்பதம்பெறற்பொருட்டே. (ருச)

(முருகவேளுமமுக்கியமுரைத்தது.)

சண்முகனுறுமுகன்குமரோசன்
சாமிநாகாசலனமரர்
கண்மணிமுனிவர்கருத்தினுண்மணியெண்
கண்ணனைச்சிறைதவிர்த்தருள்வோன்

அண்ணலெங்கண்ணுக்கினியனென்றேத்து
மவர்க்கருள்செய்குதுமென்முன்
விண்ணவர்வாழ்த்துந்தணிகையின்ஞான
விளக்கெனத்திகழும்வித்தகனே. (ருரு)

(மாயாவாத மாண்பொருளுரைத்தது.)

பாசமும்பசுவுமில்பொருளென்னப்
படிறுரைத்தெவ்வமில்பதியே
பாசமும்பசுவுமாகிநின்றழியும்
பச்சையாம்பொய்யுரைப்பதனுல்
ஏசுவர்மாயாவாதரொன்றறிஞ
ரேதமாரசத்தியம்பகரும்
பாசவீக்கத்தார்தங்களையென்முன்
பனிமலைத்தணிகைவாழ்பரனே. (ருசு)

(தம்மைப்பரமெனல் சாலாதென்றது.)

பரமுயிர்சகமூன்றிவைகடந்தொளிரும்
பரமெனத்தம்மையேபேசிப்
பரநினைவென்றுமுயிர்நினைவென்றும்
படிற்றுரையாடுவார்ஞானந்
திரமெனமதியேல்சிற்றறிவாளர்
சேர்க்கையாற்றீமையேவருமென்
றுரமுறக்கூறியருளினன்றணிகை
யுயர்வரைமுளைத்தெழுஞ்சுடரே. (ருஎ)

(பிரமகூடத்தர் பேதமுரைத்தது.)

பிரமகூடத்தரிருவரைப்பேசிப்
பேதுருமறைதெளியாதார்
பிரமமொன்றென்பர்கூடத்தனந்தோ
பிறந்ததுண்டோவெனிற்பேசார்
பிரமகூடத்தர்நித்திபொன்னும்
பெருமைகண்டுணர்தியென்றிசைத்தான்
பிரமமாந்தணிகைமலைவளர்ஞானம்
பிகைகரத்தேந்துமாமணியே. (ருஅ)

(சித்தியர்பிரமகூடத்தரொன்றது.)

சித்தொருநான்காய்ச்செப்புவரீசன்
　　சீவனென்றிவரையுஞ்சேர்த்தே
சித்திவைபிரமகூடத்தர்மாயை
　　செறிதருமவித்தைதோய்ந்திடலா
லித்திறம்பேசல்காரியங்கண்டாங்
　　கெப்படியானுமுன்னிரண்டு
நித்தியங்காண்டியென்றனன்றணிகை
　　நெடுவரைமேவுநின்மலனே. (ருசு)

(இமுக்குவமான மேலாதென்றது.)

சுத்திகாரஜிதமென்னவேயுலகைச்
　　சொல்லுவர்சுத்தியேபிரம
முத்தியாற்கூறவுளதுநிர்மூட
　　ருரைப்பதென்னேவுரைபிரம
சத்திதானழிந்துமாழ்குமேல்சுத்தி
　　தானன்றேமாழ்கும்வேறொருவன்
பித்துறல்காண்டியென்றனன்றணிகைப்
　　பெருமலைமேயபெம்மானே. (சுO)

(கனவைப்பொய்யெனல் கரிசென்றுரைத்தது.)

கனவிடைக்காணுமின்பதுன்பங்கள்
　　கழறுவர்பொய்யெனவறியார்
கனவொடுநனவின்பயனிருவினையின்
　　காட்சிசேர்தலினவைமெய்யா
மெனவுரைத்தனனெந்துரையருட்காழி
　　யேந்தலாய்வந்தவதரித்த
தனமெனுந்தணிகைப்பதிவளர்சுத்த
　　சாட்குணியப்பெருங்கடலே. (சுக)

(இதுவுமது.)

கனவிலேகண்டதின்மையானனவிற்
　　கனவினைப்பொய்யெனிலந்தோ
நனவிலேகண்டதுண்டுகொல்கனவி
　　னவிற்றிடார்பொய்யெனவதனுல்

வினவுமோரிரண்டுமேல்வருமொன்று
    மெய்யெனவிரித்துரைசெய்தான்
நினைவிகந்தொளிருந்தணிகைமால்வரையி
    னிலைத்தருணிமலபூரணனே. (சா உ)

(ஈசனேசிவ னென்றதையிடித்தது.)

பளிக்குமண்டபத்தினிழல்பலதோய்ந்து
    பல்லுருக்காணுநாய்போலக்
களிக்குமப்பிரமமொன்றுபற்பலவாக்
    காணுமாமாயையிலென்றே
சுளிக்கநேர்ந்துரைப்பர்மூடர்வேதாந்த
    சூத்திரந்தெளிகிலாரென்றான்
அளிக்குலமென்னவன்பர்சூழ்தணிகை
    யமர்ந்தபன்னிருகரத்தரசே. (சா ங)

(இதுவுமது.)

நாயறியாமையாற்பல்வாக
    நாடுறுநீழலைப்பளிங்கில்
நாயின்வேறெனபளிக்கையுங்கண்டா
    றுடுமோபிரமநன்னிலையே
நாயதோபிரமநகுவர்காண்மேலோர்
    ஞாயமன்றீதெனநவின்றான்
தாயகமாகுந்தணிகைவாழ்ஞானத்
    தலைவனுஞ்சத்திவேலோனே. (சா ச)

(பொய்ப்போதத்தின் புன்மைதவிர்த்தது.)

அறிவெவனினைவிற்கூடுமெந்நினைவே
    தறிவெனும்பிரமமொன்றேயென்
றறியவேதங்களுரைக்குமேலந்தோ
    வதுபரமுயிர்சகமாகி
நிறையுமாறுண்டோவந்நினைவதனை
    நீங்குமாறெவனறிவென்றான்
அறிவினுக்கறிவாய்த்தழைத்தொளிர்தணிகை
    யங்கிரிவாழமற்புதனே. (சா ரு)

(சமயவாதிகள் சார்பிவையென்றது.)

தேகமேபிரமமென்பரிந்திரியந்
தெய்வமென்பார்பிராணாதி
யாகுமப்பிரமமென்பருட்கரண
மாகவுங்கூறுவார்சீவன்
சோகமில்கடவுளென்பர்மாயோனைச்
சொல்லுவர்பரசமும்பசுவு
மாகநீகாண்டியென்றனன்றணிகை
யம்பதிவாழுமெம்பதியே. (சுசு)

(இதுவுமது.)

மந்தராய்மயங்கிப்பிராந்திஞானத்தான்
மடிந்திடுவார்சிலபேயர்
சிந்தைநொந்தயர்ந்துசேர்பரிணாமஞ்
செப்புகின்றார்சிலபேயர்
பந்தமோக்கங்கள்பரமுயிருண்டோ
பார்க்கிலென்பார்சிலபேயர்
அந்தநிட்டூரப்பேய்களிற்சேரா
தருளினன்றணிகையாண்டவனே. (சுஎ)

(இதுவுமது.)

சீவனுக்குற்பத்திகண்முதலாகச்
செப்புவர்மாயையேபிரம
மாவதுங்கூறுவாரதுபொய்யா
வறைந்திடுவாரதற்கழிவு
மேவிடுமென்பராணவம்வேறாய்
விளம்பிடார் கன்மமேதென்பார்
சாவிபோஞ்சமயக்கத்திவையென்றான்
றணிகைவாழ்தமனியக்குன்றே. (சுஅ)

(சிவனிடமுலகஞ் செனித்தலீதென்றது.)

உலகமுமுயிருமுதித்தொடுங்கிடமற்
றுமையொருகூறுடையானி
னிலவுமோர்கூறென்றருமறைதெரிக்கு
நிச்சயமீதெனப்பகர்ந்தான்

கலகமாமாயைக்கட்டறவென்னைக்
கலந்துபேரின்பவீடளிக்கு
மலைமகள்புதல்வன்றணிகைவாழ்முருகன்
வள்ளியைமணம்புணர்ந்தோனே. (௬௬)

(உயிர்கள்சிவனிட முதித்தலீதென்றது.)

பரனிடமுயிர்களனலிடைப்புலிங்கம்
பகிர்முகமாதல்போல்வருமென்
றுரமுறக்கூறும்வேதமென்பால்வந்
தொப்புறவிரித்துரைசெய்தான்
பரமுடனபரங்கடந்தமெய்ந்நிலையைப்
பரிவுடன்றந்தெனையாண்ட
வரன்றிருத்தணிகைவள்ளறெய்வானை
மகிழ்குமரோசமாநிதியே. (௭0)

(ஆன்மவிலக்கண மாயிஃதென்றது.)

சேர்ந்ததன்வண்ணஞ்செறிதருமான்ம
சித்தைநோக்கிடினெமைச்சேருங்
கூர்ந்தசீருடைமைபாலஃதெம்மிற்
கூறெனவுரைக்குமாகமங்கள்
தீர்ந்தவன்பாளரறிவர்காணிதனைத்
தேர்ந்திடார்கயவரொன்றிசைத்தான்
சார்ந்துமெய்யன்பர்போற்றுநற்றணிகைத்
தடவரைமேவுசண்முகனே. (௭௧)

(ஆன்மவிலக்கண மன்றீதென்றது.)

கேவலம்விபுவாய்க்கிளத்துவரணுவாய்க்
கிட்டியேயுரைப்பரோரிடத்தின்
மேவுமென்பார்கீழ்மேலுறச்சுழன்று
மேவிடுமென்பர்தீதின்றி
யாவதீதென்னவுயிரினையுடற்க
ணறைந்திடுவாரிரிந்தோடத்
தாவில்சீருண்மையெமக்கினிதிசைத்தான்
றணிகைவாழ்முருகனெங்குருவே. (௭௨)

(ஏகமென்பதன் பொருளிதுவென்றது.)

ஒன்றெனமறைகளுரைப்பதுபரம
ன்ஞெருவனேயெனவும்வேறில்லை
யென்றதுபரன்வேறில்லையென்னவுநன்
கியம்பினன்பொருள்விரித்தடியேற்
கன்றருட்காழியமர்ந்துமெய்ஞ்ஞான
மயின்றவானவன்றலையாய
குன்றமாந்தணிகைக்கோயிலைவிரும்பிக்
குடிகொளும்பரசிவகுருவே. (எசு)

(அத்துவிதத்தி னரும்பொருளுரைத்தது.)

அத்துவிதத்தினரும்பொருடேரி
னல்லவொன்றிரண்டவையன்றி
யொத்துளவிரண்டுமுணர்தியென்றிசைத்தா
ரென்றதன்பொருளெனமாழ்கிக்
கத்துறுவார்தமில்பொருடீதாக்
காட்டியாண்டருடிருத்தணிகை
யுத்தமன்வடிவேலொண்கரத்தேந்தி
யுயிர்த்துணையாகியுள்ளவனே. (எச)

(தத்துவமசியின் றத்துவமுரைத்தது.)

தத்துவமசிமாவாக்கியவுண்மை
தலைதடுமாறிநன்கறியா
துத்திகள்பேசியழிந்திடுமென்பா
லுள்ளவாறதனைவந்திசைத்தான்
சத்தியம்பழுத்துச்சகசநன்னிலையிற்
சரித்திடுமெதிவரர்வழுத்தித்
துத்தியஞ்செய்யுந்தணிகையின்மூலத்த
சோதியாங்கருணைவாரிதியே. (எரு)

(வைதிகர்மாயா வாதரன்றென்பது.)

வைதிகமார்க்கம்பேணிவாழ்குனரிவ்
வைப்பிடையெவரொனினுளுங்
கைதவம்பேசியெம்மலாற்கடவுள்
பிறிதிலையெனுங்கயவனாயே

நைதலின்மனத்தராயுரைத்திடுவர்
நான்மறைமிச்சையென்றெழுந்து
வைதிபம்பதகர்காண்டிநீயென்முன்
வளர்திருத்தணிகைவானவனே. (எசா)

(வைதிகர்சைவ மறையோரென்றது.)

சைவவைதிகங்களுயிருடலென்றே
சாற்றலான்மறையுபநிடங்கள்
சைவமேவைதிகப்பெயர்தாங்கும்
தன்மையால்வைதிகரர்வார்
சைவராயெம்மைக்கண்டுளந்தணியுந்
தாபதர்காண்டிநீயென்முன்
சைவமாதவர்சூழ்தணிகையின்முளைத்துத்
தழைத்தொளிர்சாமியாங்குகனே. (எஎ)

(ஆகமஞான மதிகமென்றது.)

மறைவழிநிற்பார்ஞானமெஞ்ஞான்று
மாட்சிபெற்றிலதுயர்சைவ
நிறையொளிராகமத்தினல்வழியே
நேருமெய்ஞ்ஞானமென்பதனுக்
கிறைவனன்றெருநால்வரையுயக்கா
மேற்றமேசான்றெனவுரைத்தான்
கறைதவழ்மதியந்தவழ்திருத்தணிகைக்
காரணன்ஞானபூரணனே. (எஅ)

(ஆகமங்கொண்டறிவாமறையென்றது.)

காமிகமுதலாச்சைவசித்தாந்தங்
கண்டபேர்க்கன்றிவேதாந்த
மாமதுசித்தியாகுமோமூல
ரன்றருள்செய்தமந்திரமாந்
தோமறுவழிநீகாண்டியென்றிசைத்தான்
சுருதியுமாகமத்தொகையு
நீமமாயுதவியெனக்கருடணிகை
நீடொளியாகுநிர்க்குணனே. (எகூ)

(எல்லாவித்தையு மீசனதென்றது.)

வேதமோடாகமாதியெக்கலையும்
வித்தகனெந்தையேசொற்ற
வேதுவால்வித்தையாவுக்குமீச
னெனமறைகூர்ந்திசைத்திடுமா
லிதறிநீயென்றெவ்வுயிர்த்திரளு
மியங்கிடவியக்குமெந்திரம்போன்
றுதரம்பெருகுந்தணிகைமால்வரையா
னறைந்தனனீததிசயமே. (அ0)

(வேதவாகியவா கமங்களைவிதந்தது.)

வேதவாகியமாவிளம்புமாகமங்கள்
விண்டுவின்பாஞ்சராத்திரமும்
பேதமார்லகுலீபைரவஞ்சோமம்
பேசுகாபாலமாதியுமாம்
வேதமெய்ப்பொருளைவிளக்குமாகமங்கள்
விதிசிவாகமங்களென்றிசைத்தான்
வேதசிவாக மங்கணின்றேத்தும்
வியன்றணிகாசலபதியே. (அக)

(உபயப்பிரட்ட ருண்மையுரைத்தது.)

பூசுவதொன்றுபிதற்றுவதொன்றாய்ப்
பூரியர்சிலர்திருநீற்றைப்
பூசியேராமராமவென்றரற்றிப்
புலம்புவாரவர்மருட்போத
மாசொழித்திடுமோமால்சிவனுமோ
மறைத்துணிபோவிதுமாய
பாசமென்றுவகைகூர்ந்துரைத்தனனெம்
பதிதணிகாசலபதியே. (அஉ)

(சமயவாதஞ் சாற்றுறுதென்றது.)

சமயவாதத்திற்சார்ந்துழன்மூடர்
தம்மைநோக்கிடின்மிகுநகையா
மமையுமோஞானமடைவரோமுத்தி
யாகமவேதசம்மதமோ

சமதமாதிகளாற்ருழ்ந்தெமைவழுத்துந்
தன்மையோர்க்கேசிவமுண்டா
மன்மதியென்றிரங்கியருளினன்றணிகை
யாண்டவனெங்களாண்டவனே. (௮௩)

(சைவாசாரியர் தாமிவ்வொன்றது.)

மாளிகைத்தேவராதியொன்பதின்மர்
மன்னுபமன்னியமுனிவ
ராளுடையவரோர்நால்வர்பின்னுல்வ
ரறுபத்துமூவரோடேனைக்
கோளின்மெய்த்தொண்டர்சேக்கிழார்முதலாங்
குருபரர்க்கன்புசெய்யென்ருன்
ருளிணைவருந்தித்தலைமிசைமேவத்
தந்தருடணிகையெந்தனமே. (௮௪)

(சிவபரத்துவதா பகரிவவொன்றது.)

போற்றுமிராமகண்டர்சீகண்டர்
புகலுநாராயணகண்டர்
சாற்றுசீர்சுதரி சனர்சிவஞானந்
தந்திடு மப்பதீக்கதர்நன்
கேத்துமெய்யன்பரொண்ணிலார்வேத
மெடுத்துமாபதிக்குளவேற்றஞ்
சாற்றினரென்முன்றணிகைவாழ்குமர
சாமியாமுதிர்கிழவோனே. (௮௫)

(சிவபரத்துவநூ லாமிவையென்றது.)

நிகரறுசுருதிசூக்திவேதாந்த
நிண்ணயஞ்சூத்திரவிருத்தி
பகருமாபாடியம்பல சைவ
பத்ததிபலசிவோத்கர்ஷம்
புகரில்சீர்சிவதத்துவவிவேகம்பின்
போந்ததர்க்கஸ்தவமிவைகள்
மகிமைசால்சைவநூலெனக்கூறி
வழங்கினன்றணிகைவாழ்பரனே. (௮௬)

(சைவசித்தாந்த சாத்திரமுணர்த்தது.)

போதமுஞ்சித்திசிவப்பிரகாசப்
புண்ணியநூலுமேதங்க
ளேதுமில்களிறுமுந்தியுமுதலா
வியம்புசித்தாந்தசாத்திரங்க
ளோதுவர்பதினன்கென்னவெற்கியம்பி
யுகந்தளித்தான்மயிலேறி
மாதுமைகாணவருந்திருத்தணிகை
மைந்தனுங்கந்தனென்றுணேயே. (அஎ)

(அடியவர்பூசை யாற்றுகவென்றது.)

அடியவர்க்கேவலாற்றுவான்றேடி
யடைந்தனன்கீரனார்மேனிப்
பொடிகொள்சீரருணகிரியெனவருமெம்
புண்ணியர்மூகைதீர்ந்தேத்திப்
படிவருங்குமரகுருபரதேவர்
பாதபங்கயங்களேகதியென்
றடியனேன்றணிகையங்கணனருள்கூர்ந்
தாதரித்தாண்டனனன்றே. (அஅ)

(அருணூலிவையென வாதரவுரைத்தது.)

கந்தரந்தாதிவகுப்பநுபூதி
காட்சிசேர்ந்திடுமலங்காரம்
சந்தமாருண்மைத்திருப்புகழ்மேலோர்
சாற்றுமாற்றுப்படைமுதலா
விந்தநூலன்றியேற்றிலம்வேறென்
றென்றுமேத்திடுதிநீயென்முன்
கந்தனெமெந்தைதணிகைமால்வரையிற்
கண்டவெங்கவுணியக்கன்றே. (அகூ)

(கண்டருட்கோலக் காட்சியுரைத்தது.)

குன்றுதோராடலுவந்தமாமணியைக்
குஞ்சரமுகத்தவனடு
மென்றனருயிராமிளவலைக்குறத்திக்
கேற்றகாந்தனையிபமூர்ந்து

நின்றசீரானைமஞ்ஞையூர்ந்தானை
நீண்டவேற்படைசுமந்தானை
வென்றிசேர்தணிகைமால்வரைமீது
மேவிடக்கண்டனன்யானே. (கூ0)

(ஊனுண்டார்கதி தான்கண்டுரைத்தது.)

உயிர்க்கொலையிரங்காதுண்ணுவாரொன்ற
னுயிர்செகுத்தெங்ஙனேயெம்மோ
டயர்ப்பிலாதொன்றுபட்டழியாமெய்
யாநந்தமெய்துவரந்தோ
பயிர்ப்பிலாக்கொடியபாவிகளன்னோர்
பக்கல்யாமிரங்கிலமென்றான்
செயிர்த்துநீள்வினையைப்போக்குமெந்தணிகைச்
செம்மலெங்கடவுண்மாமணியே. (கூக)

(பாதகமைந்தின் பான்மையுரைத்தது.)

கொலைமுதலாகப்பாதகம்புரியுங்
கொடியரைத்திண்டிடிற்காணிற்
றலைமுழுகுவர்காண்மேலவரன்னோர்
சார்புநீத்திடுதியென்றிசைத்தான்
அலைகடற்பள்ளியானுளத்தமரு
மப்பனுமொப்பில்சங்கரனுக்
கெலையில்சீர்பிரணவப்பொருளுரைத்தங்
கெழுந்தருடணிகையெங்கோவே. (கூஉ)

(பொய்வேடத்தின் புதுமையுரைத்தது.)

வேடமும்பூசைமிகுதியுங்கொண்டு
வேடரிற்கொடியகாதகராய்
மூடர்பல்லோரிப்புவனியிற்றிரிவர்
முன்னவனடியருக்கொன்று
நாடியீந்திலரஞ்ஞானபூரணர்கா
ணுடிடேலவரைநீயென்றான்
வேடமுந்தவமுந்தந்தெனையாள
விரும்புமெந்தணிகைவேதியனே. (கூங)

(ஈனஞானிகளிவரென விசைத்தது.)

ஞானிகள்பூதிகண்டிபிலிச்சை
நாடிலார்பூசையும்புரியார்
நானிலம்புகழுமவரையென்றுன்னி
நாடொறும்போனகந்தேடி
யீனமாந்தொழில்கள்யாவுமேபுரிவா
ரென்கொலாச்சரியமீதென்றுன்
ஞானசம்பந்தனுகுமெந்தணிகை
நாயகன்ஞானநாயகனே. (௬௪)

(இதுவுமது.)

மழித்தலுநீட்டலுனும்வேண்டாமெய்ம்
மார்க்கருக்கெனத்தமிழ்மறைநூல்
வழுத்தவுஞ்சடையைவளர்த்துமேசிகையை
வாங்கியுமேயொழுக்கிலரா
யெழுத்துவாசனையுமெய்திலார்ஞான
மெய்தினரென்னவூரெங்கும்
பழுத்தவராகித்திரிவதென்னென்றுன்
பழுமலைத்தணிகைவாழ்பரனே. (௬௫)

(ஞானிகண்முதலாநால்வரையுரைத்தது.)

ஞானமேமுதனற்பணியொருநான்கில்
ஞானியாவுக்குமேயுரிய
னீனமில்யோகிமூன்றினுக்குரிய
னிரண்டுடையான்கிரியாவான்
மானமார்சரியையொன்றுமேசரியா
வானுடையானிவைதெளியா
ரூனமேபெறுவரென்றுரைத்தனனெம்
முடையவன்றணிகையோண்பதியே. (௬௬)

(சரியையேபோதுஞ் சார்ந்திடினென்றது.)

துவிதஞானத்தாலுண்டெனுமேயத்
துவிதமாகமமறியென்றே
யவிருமெய்ப்போதமறைந்தனர்பெரியோ
ராதலிற்சரியையேபோது

மெவர்கொடலோவறிவாரோகவாதத்தி
லிறங்கிமாழ்குவரொனவிசைத்தான்
அவனியோர்தாழுந்தணிகைமால்வரையி
லமர்ந்தொளிரற்புதமணியே. (௯௭)

(தணிகையில்வாழ்வு தானுண்டென்றது.)

யோகபோகங்களுயிர்களுக்கருள
யோகியாயிருந்துமெம்மன்னை
யாகமேவுறநற்போகியாயிருந்து
மருளுவன்காண்சிவனெந்தை
யேகனுமவனையோகபோகங்க
ளெய்திலானெனத்தெளியென்றுன்
யோகபோகங்கடருந்திருத்தணிகை
யூடொளிர்வான்மதிவிளக்கே. (௯௮)

(தணிகையிற்சூழ்வோர் தவம்பெரிதென்றது.)

ஆலமார்கண்டத்தப்பனைப்பாடு
மாரமுதாயினனெங்கள்
கோலமார்தணிகைக்குமரவேள்வள்ளி
கொழுநனுங்கழுமலத்திறையை
வாலிதாநிலைபெற்றன்பினுல்வழுத்து
மாதவமுடையரோயெம்மை
யேலவிங்கெய்தியாட்கொளும்பெரியோ
ரென்பதெம்வாலிதாநிலையே. (௯௯)

(வாழ்த்து.)

அழுதிருகண்ணீர்வாரமெய்பொடிப்ப
வன்பினுலுருகியென்னன்பே
பழுதிலோவியமேபாலொடுதேனும்
பழமுமாயினிக்குமாரமுதே
விழுதையேன்கண்டாய்தணிகையின்மருந்தே
வேற்படையாயெனவிழுந்து
தொழுமடியேனைத்தூக்கியேயாளுந்
துணைமலர்த்தாள்கள்வாழியவே. (௧௦௦)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சண்முகதேவன்

திருவடிவாழ்க.